**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITINAL MAHILA, SALEM.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No** | : | **C.C. 1223/2022** | **Date** | : | **19.12.2023** |
| **Deposition of Witness for** | : | **PW.3** | **Taluk** | : | – |
| **Name** | : | **திருமதி.மோகனாம்பாள்** | **Calling** | : | – |
| **Father / Husband Name** | : | – | **Religion** | : | – |
| **Village** | : | – | **Age** | : | – |
| **Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 19.12.2023.** | | | | | |

(எதிரி ஆஜர்)

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

நான் தற்போது அம்மாபேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் புகார்தாரரிடம் புகாரினை பெற்று முதல் தகவல் அறிக்கை நான் பதிவு செய்தேன். புலன் விசாரணை செய்த திருமதி.சிவகாமி என்பவரின் கையொப்பம் மற்றும் எழுத்து நடை எனக்கு நன்கு தெரியும். இவ்வழக்கின் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு அவருக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 13.06.2022–ம் தேதி நான் நிலைய பணியிலிருந்தபோது ஏற்காடு அடிவாரம் ஸ்ரீநகரை சேர்ந்த ரமேஷ்பாபு என்பவரது மனைவி வனிதா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 28/2022, ச.பி. 354A(3) இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கு தொல்லை கொடுத்தல் தடுப்பு சட்டம் 2002–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **வனிதாவின் அசல் புகார் மனு அ.சா.ஆ.2 ஆகும். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும்.** பின்னர் வழக்கினை புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் திருமதி.சிவகாமி அதேநாள் 14.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜசேகர், ரவிசந்திரன், இருவர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும்.** பின்னர் வழக்கின் சாட்சிகள் வனிதா, ரமேஷ்பாபு, சசிக்குமார்,

தினேஷ், தமிழழகன், ரவிசந்திரன், ராஜசேகர், ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் அதேநாள் 16.45 மணிக்கு கோரிமேடு சோதனை சாவடி அருகே வைத்து எதிரியை கைது செய்து நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் என்னையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து விசாரணையை முடித்து எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளர்.

**<u>எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் ஏற்கனவே இருந்த முன்விரோதத்தின் காரணமாக இவ்வழக்கு பொய்யாக கொடுக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் நடந்திருந்தால் வீடியோ புட்டேஜ் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

M MATHIVANAN

Digitally signed by M MATHIVANAN
Date: 2023.12.19 15:15:09 +0530

ஒம்/- மோகனாம்பாள்

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம், சேலம்